425

வேலுமயிலுந் துணை.

அறுபடை வீட்டில் ஒன்றாகிய திருவாவினன்
குடி என்னும் பழனிமாமலையில் எழுந்தருளியிராநின்ற

ஸ்ரீ சுப்பிரமண்ணியர்
தோத்திரப் பாமாலை.

இஃது
உடுமலைப்பேட்டை தாலூகா செல்லப்பம்பாளையம்

மு. சுப்பேகவுண்டர் அவர்கள்

கேட்டுக்கொண்டபடிக்கு
தையூர் திருவேங்கட ஐயங்கார் குமாரர் கோ. தா,
வீரகேரளத்திலிருக்கும்

T. N. பெருமாளையங்காரவர்களால்

பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு சுத்தப்பிரதியாக்கி
நூறு செய்யுளையும் ஒருங்கு சேர்த்து
சாற்றுக்கவிகள் பெற்று

கோயமுத்தூர் கிருஷ்ண விலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1928
விலை அணா 0-4-0.

பிழை திருத்தம்.

பக்கம்.	செய்யுள் நெம்பர்.	பிழை,	திருத்தம்.
		சாற்றுக்கவிகள்.	
1	1	சர்வாமே	சர்மாவாமே
5	2	பெற்றனரோ	பெற்றனனரோ
		நூல்.	
12	31	நன்மனத்தாறெழுந் துன்னி	நன்மனத்தாறெழுத் துன்னி
13	34	முறுகா	முருகா
,,	35	பைசாம்	பைசாசம்
,,	36	கந்தே	கந்தா
15	46	வள்ளிமாணளா	வள்ளிமணாளா
,,	,,	பாவலா	பாவலர்
16	51	சுப்பிறண்ணியனே	சுப்பிரமண்ணியனே
,,	62	வென்னபிழை	வென்றன்பிழை
18	64	சுப்பிர என்பது	நீக்கவும்
,,	67	பழனியங்சிரியாய்	பழனியங்கிரியாய்
20	76	திரியுரதகனன்	திரிபுரதகனன்

சர்வரோக நிவாரணி சஞ்சீவி குளிகைகள்,

இக்குளிகைகள் சுருதி யுக்தி அநுபவம் என்னும் மூன்று சாதனங்களால் எனது ஆயுள்வேத போதகுருவாசிரியாகிய உலோக சஞ்சாரி இலக்ஷ்மி நாராயண யோகிகளாலும் எம்மாலும் தயார் செய்தனவாகும் இதன் குணமோ நிறைவு வில்லையோ குறைவு. இதனை ஒவ்வொருவரும் தருவித்து பார்த்தால் நான் வேண்டாமலே நீர் வேண்டுவீர்கள் உபயோகிக்கும் முறை மருந்துடன் அநுப்புவோம். சேம்பிள் வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அநுப்பவும். மருந்துக்கு ஆர்டர் செய்யும்போது அவரவர்கள் வயது சரீர தன்மையும் வியாதியின் கூறும் விவரமாய் எழுதுதல் நலம்.

விலை விவரம்.

100 குளிகை	அடங்கிய	புட்டி 1க்கு	ரூ. 1—0—0.
50	,,	,,	0—10—0.
25	,,	,,	0—6—0.

எனது விலாசம்:—

இராமகிருஷ்ணய்யர் சுகாதந்த அவுஷதசாலை,
தெலுங்கபாளயம், பேரூர் போஸ்டு,
கோயமுத்தூர்.

வேலுமயிலுந்துணை.

சுப்பிரமண்ணியர் தோத்திரப்பாமாலை.

சாற்றுக்கவிகள்.

உடுமலைப்பேட்டை தாலூக்கா செல்லப்பம்பாளையம்
**மகா-ா-ஸ்ரீ அங்கப்பகவுண்டர் குமாரர் அருணாசலக்
கவுண்டர் இயற்றிய எழுசீர்கழிநெடில்.**

பாவையைநுகர் வோன்குருபாநுறுபங்கயவதனன் பாமாலை,
அரியமாவுல கோரமிர்தெனவருந்த வச்சிட்டோனுமெனிலறை
வாம், திருவளர் செல்வநகரினிலுறையுந்தென்கலைவைணவ மறை
யோன், மருவிலாத்திரு வேங்கடப்பெரியோனின் மகன் பெரு
மாள் சர்வாமே.

இப்பிரபந்த பாமாலையின் பரிசோதகரும் மருதாசலக்கடவுள்
பிள்ளைத்தமிழ் திருப்பேரூருலா சோதிடயவனகாவிய முதலிய
நூலாசிரியருமாகிய கோயமுத்தூர் தாலூக்கா வடவழி வித்வான்
**மகா-ா-ஸ்ரீ அருணாசலக்கவிராயர் அவர்களால்
இயற்றிய ஆசிரிய விருத்தம்.**

திருமகளுடன் காமதேனுவோடி ரவியுஞ் சிந்திக்க வா
முதவமுத், தென்பழனி வடிவேலர் தோத்திரப்பாமாலை செகமீது
முன்னோர்களாற், பெருமையொடுகூறியும் பனைமடலிலெழுதியுள
பிரபந்தமதையொருங்கு, பிழையறச் சேகரித்ததனைவெளியாக
வும் பெருமாள் சர்மாவுதவவே, தருமலருமணிகளொடு மலைகட
வுந்திகளுஞ் சாருமிக்கொங்கிலுயர்வு, தழைவுதல்லுருக்க நாடதி
பனுஞ் செல்வநகர்தனில் வந்த கங்கா குலம், வருபவழகோத்திரன்
சுப்பைய மகிபாலன்வந்து கேட்டுக்கொண்டதால், வண்மைமிட்
புலவர் களிகூற வச்சினிலிட்டுவாய்த்த புகழ்பெற்றனரோ.

பல்லடம் தாலூக்கா கலங்கல்

ஸ்ரீ உ. வே. ஆர். திருமலை அய்யங்கார் அவர்கள் எழுதிய கட்டளைக் கலித்துறைகள்.

நீர்கொண்ட மேக நெடுமால்புள் ளாட்சியை நேர்ந்துறமஞ்
சீர்கொண்ட நேயச் செழுஞ்செல்வப் பன்புரி சேர்ந்திலகும்
வார்கொண்ட முத்து வளவன்றன் மைந்தன் வளர்பழனிப்
பேர்கொண்ட சாமிக் கினியன்சுப் பையனென் றேத்துவரே.

அன்னவன் றன்குரு வாரிய வாசிட்ட கோத்திரத்தோன்
றென்னவ னும்பணி தேர்தவ னேர்திரு வேங்கடனும்
மன்னருள் நம்பெரு மாள்சரு மாவெனு மாவுணர்வோன்
றன்னினன் வேண்டின னாறுமு கப்பா தொடுத்திடவே

தேடினன் பற்பல தேம்பனந் தாள்கள் தெரிந்திடவே
பீடுட னச்சிட் டளித்தனன் யார்க்கும் பெரும்பயனே
நாடின னநிலஞ் சேர்வீர கோள நன்னகர்வாழ்
மாடியை மாண்பெரு மாற்குறு யாஞ்செய் கைம் மாறுமுண்டோ

மதுரை ஜில்லா பழனித்தாலூக்கா ஆயிக்குடி ஜமீன் சமஸ்தான வித்வ சிரோமணியாகிய திருவாளர்

மகா. ள-ஸ்ரீ ப, பொன்னுசாமிபிள்ளை அவர்கள் இயற்றிய சாற்றுகவிகள்.

அறுசீர்கழிநெடில்.

பொடியணியுஞ் சிவனீன்ற பழனியாண்டவன்மீது புனித மாக, படிமிசையின் முன்னோர்கள் பகரேட்டுப் பாவினங்கள் பலதுவாய்ந்து, அடி தொடை சீரவைவகுத்தங் கீரைம்பதாம் பாக்களமைத்தச்சிட்டான், கடிபொழிலார் செல்வநகர் பெருமாள் சர்மாவென்னுங் கவிஞன் மாதோ.

எண்சீர்க்கழிநெடில்.

தடத்துநிறைவீர கேரளபுரத்திற் சார்ந்துலவுவாரிய சன்மார்க்கசீலர், கடக்களிறு நடத்துலவுபழனித் தோத்திரகண்ய பாமாலை யொன்று கண்டாராய்ந்து, கடத்திலுறு முனிக்கு நிகரான புண்யகவிப்புலவர் செவிக்கினிது கழறநேர்ந்தான், கடற்படு பாலும் வெளுத்துமந்தாத்தால் கலங்கியலைந்தங்கு கடைபட்டதாமே.

---

1. ஸ்ரீ மஹாபுராண ரத்னம்.
2. திருவரங்கத்துரைச் செய்யுளலங்காரம்.
3. ஸ்ரீ தேவநாயகர் திரிபுயமகச்சந்தவந்தாதி.
4. திருமலை வழிநடைப்பதம்.
5. ஸ்ரீ ஆண்டாள் சரித்திரம்.
6. ஸ்ரீ நப்பின்னை திருக்கல்யாணம்.
7. ஸ்ரீ துருவ சரித்திரம்.
8. தசகணித விளக்கம்.
9. அநுபவாமிருதம்.
10. குலதர்மவிளக்கம்.

இவைகளின் நூலாசிரியரும் ப. தா. இலட்சுமிநாயகபுரம்
தேவஸ்தானம் காரியதரிசியும் கவிவாவி

ஸ்ரீ-உ-வே இராமாநுஜக்கவிராயர் சகோதரருமாகிய
எல். ஆர். சாமையங்கார் அவர்களால் இயற்றிய

நேரிசை வெண்பா.

சண்முகன் பாமாலை சாலத் திருத்தியச்சில்
பண்மகன் வேதியரிற் பத்தியுள எண்மிகும்
நாமம் பெருமாளை யங்கார் நயவுரைகள்
சேமம் மதி மனமே நீ.

கோ. தா. தெலுங்கபாளையம் இயற்றமிழ் வித்வான்

வெங்கடலக்ஷ்மணையர் குமாரர் வி. இராமகிருஷ்ணய்யரால் இயற்றிய வெண்பா.

கந்தன்றுதி கவிகள் காசினியில் முன்னோர்கள்
சிந்தை யுவந்தோர்ந்து செப்பியதைப் பந்தந்தீ
ருத்தமர்வா ழொக்கிலா ரொருநூரையும் பேர்ப்பெருமாட்
பத்தனவன் அச்சிட்டான் பார்த்து.

மதுரைத் தமிழ்ச் சங்க வித்வானும் கோயமுத்தூர் கவர்மெண்டு காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய

மகா-ா ஸ்ரீ அ. கந்தசாமிபிள்ளை அவர்கள் எழுதிய சாற்றுக்கவிகள்,

வெண்பா.

சுப்ரமண்ய மாலையெனச் சொல்பனுவல் முப்பானுந்
தப்புந்தவறுமாய்த் தான்படிப்பார் இப்புவியில்
அன்னதனை யாராய்ந்தே யாசகற்றி நூலுக்கி
இன்னநூல் தந்தானினிது.

இவ்வரிய நன்மையினை யெல்லாருங் கொண்டாடச்
செவ்வன் புரியுந் திருவாளன் எவ்வனெனில்
ஞானமுதல்வன் பெருமாள் நாமத்தான் செந்தமிழ்ப்பா
வானமுத மென்ன மொழிவான்.

மாவீரகோளமா மன்னும் பதிவாழ்வோன்
நாவீறுடையான் நயகுணத்தான் பூவேறு
நாபிப்பாமனடி நாடியனுதினமும்
தாபிக்குந் தூயவுளத்தான்.

இந்நூலைப்பிரசுரித்தவரின் புத்திரரும் பல்லடம் தாலூக்கா காடிவாவி போர்டு எலிமெண்டரி பாடசாலையின் தலைமை ஆசிரியருமாகிய

V. P. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் அவர்களியற்றிய நேரிசை வெண்பா.

முருகன் றுதிகவிகள் முற்றுமா ராய்ந்து
தருக வென்றோர்க் கச்சிட்டுத்தந்தான் பெருகுந்
திருவீர கேரளஞ் சேர்பெருமாள் சர்மா
விருபாதம் போற்றுவன் யானீண்டு.

பல்லடம் தாலூக்கா மல்லேகவுண்டன்பாளையம்

ஸ்ரீ. உ-வே இராமானுஜய்யங்கார் குமாரர் வரதராஜ ஐய்யங்காரால் இயற்றிய ஆசிரியப்பா.

சிறப்புபாயிரம்.

திருமகளுலவும் சோராநா டதனில்
மருமலர்ப் பொழிலின் வளநிறைந் திலங்கும்
செல்லப்ப புரியெனுஞ் செல்வமா நகரில்
இல்லொப்ப வாழும் இயல்புடை வேளாண்
மாபினிற் பவழ வளர்கோத் திரத்து
சுரபிபோல் வண்மை சுரந்திடு முத்துச்
சாமியாம் வள்ளலின் றனையன் சுப்பையன்
பூமியோர் புகழும் புண்ணிய மனத்தன்
பழனியம் பதிவாழ் பாமனு முருகன்
கழனினைந் தேத்துங் கருத்துள புனிதன்
தனக்கு நட்பினனுந் தன்குலத் தவனும்
மனக்கினி யவனும் வாய்மையுங் கல்வி

ஞானமுங் கொடையும் நன்மையு முள்ளோன்
வானமு மதிக்க வாழ்ந்த அங்கப்ப
பிரபலன் றவத்தாற் பெற்றிடும் புதல்வன்
இரவலற் கீயும் இரங்கிய மனத்தன்
அருணசலப் பெய ரறிவனை நோக்கி
கருணைகா ணுங் காங்கயன் மீதில்
பெரியோ ரியற்றிய பிரபந்தப் பாக்கள்
சரியாக நூறெனச் சாற்றுவ ரறிஞர்
இக்கால மச்சி லிருப்பது முப்பதே
அக்கால முள்ள அருங்கவி முழுதும்
தேடி யச்சிட்டால் தெளிவுடை யடியார்
பாடியே குகனைப் பணிகுவ ரெனவே
இருவரும் யோசித் திருக்கத்தம் வித்யா
குருவாம் வசிட்ட கோத்திரத் துத்திரு
வேங்கட சர்மா வியன்முதற் புத்திர
னுங்கல்வி மெய்மை யருணிறை யகத்து
பெருமாள் சர்மாவரப் பிரியமாய்த் தங்கள்
மருமத்தி ருந்து வளர்குறை கூற
அன்னவன் பற்பல அறிஞர்பாற் சென்று
முன்னவர் பாக்கள் முழுவதுந் தொட்ட
புரிகிரகோத்திர பூபதி பழனிப்
பெரியவ னீன்ற பிரபலன் கருப்ப
வள்ளல்க ணிருந்ததை மனமகிழ்ந் தெடுத்து
தெள்ளிதாய்த் திருத்தி திகழ்ந்திட வச்சிற்
பதிப்பித் தளித்தனன் பாவலர்
துதித்துக் களித்திடத் தூய்மறை யோனே.

வேலுமயிலுந்துணை.

சுப்பிரமண்ணியர்

தோத்திரப்பாமாலை.

காப்பு.

கடலுலக தனிலடன் மிகுபழனிக் கந்தநர்யகன்புயத்தணியப், படரொலா மகற்றுந் தோத்திரப் பாவின் மாலையைப் பகர்ந்திடப் பணிவாம், தடகிரி முழுதுஞ் சிறகரிந்தவனந் தனந்தனைத் தழைத்துற முன்னாட், குடமுனி கரக நீரினைக் கவிழ்த்த கும்பகம்பக்களிற்றினையே.

சீர்பெருகுந் தென்பழனித் தேசிகன்மேற் பாமாலை சிந்தித்தோத, கார்பெருகு மும்மதத்த யானைமுகத் தைங்கரனைக் கடவுட் கங்கை, நீர்மருவு சடையானைத் திருமருவு நெடுமாலை நீண்டவாசத், தார்மருவு நான்முகனையும்பாவி யிருசரணந் தலைமேற் கொள்வாம்.

நூல்.

சரவணபவனே யாறிருபுயனே சஞ்சலமகற்றிட விரைவாய்,
அரனதுபுதல்வா கரிமுகமேவுமைங் கரற்கிளையவேண் முருகா,
மாகத வடிவேல் கரத்தினிலெடுத்து மயிலினிலேறியே வருவாய்,
அரகர முருகா பழனிமாமலை வாழப்பனே சுப்பிரமண்ணியனே.

சிரத்தினின் முடியுந் திருமுகத்தழகுஞ் சிறந்திடு மணிகளி னொளியுங், கரத்தினில் வடிவேலிருகுழை யழகுங்கண்டெனும் வாய்நகைப சும்பொன், னுரத்தினி லணிந்த மாலைசேர்புயமு முத்திரீயத்தினோழகும், பெருத்திடு மடியார்க் களித்திடும் பழ னிப்பிரபலா சுப்பிரமண்ணியனே, (2)

கூற்றினை யுதைத்த வரனது புதல்வாகுமரனே யமரர் நாயக னே, நாற்றிசை புகழுன் மலையதின் மேவும் நலந்தரு கோபுரத் தழகும், சேற்றிரி நீர்சூழ் நந்தனவனமுஞ் செய்வளம் நோடி யரைக்காப், பாற்றிய கருணைப் பெருமைபுமார்ந்த பழனிவாழ் சுப்பிரமண்ணியனே. (3)

அணுமுதல்மேரு வரையளவான அளவிலாப் பொருள்களி னிறைந்து, பணிமலர் வில்வமாலையையணிந்த பரமனார் புதல்வனே யுன்னைத், துணிகரமாகத் தமிழ்முறை கூறத்துணையுன்றன் திரு வடியையா, மணியசை தும்பியுலவிய பழனிமலைவளர் சுப்பிரமண் ணியனே. (4)

குறமகளான வள்ளியைச் சேர்ந்த குமரனே யறுமுகக் கந் தா, குறைவிலாதெனக் குவ்வனுதினம் வரமுங் கொடுத்திடும் பவி சுபாக்கியமுந், திறமதில் வடிவே லெடுத்திடுந்துரையே திருக்கண் வைத்தெனக் கருள்புரிவாய், பிறவியை யொழிக்கவந்தருள் பழனி பெட்புறுஞ் சுப்பிரமண்ணியனே, (5)

மவுனமாய் நீயு மிருந்திட வேண்டா மனதுவைத் தென்னை யாட்கொண்டு, பவிசு பாக்கியமு மதிகமாய்க் கொடுக்கப் பசு மயி லேறியே வருவாய், சவுரியத் துணிவு மதிக்கின்ற வசியஞ் சகல மும் பெறுவதற் கன்பாய், தவசிருந் துன்னைத் துதித்தனன் பழ னித் தலத்துறை சுப்பிரமண்ணியனே. (6)

நித்தியமெனது சொப்பனந்தனிலும் நேர்ந்திடும் வடிவமே போல, சத்திவேலேந்தி மயின்மிசையேறிச் சரவண பவனென வந்து, புத்தியும் பவிசு புத்திர பாக்கியமும் புண்ணிய விபூதியுந் தருவாய், அத்திகளுலவு பழனியங்கிரி வாழற்புதா சுப்பிரமண்ணி யனே. (7)

அணுகியே பூதப் பேய்கள்வந் தென்னை யதட்டிடும் வேளையில் கலங்கி, நணுகியே குரல்விட் டழுதுநான் பழனி நாயகா சண்முகா வென்பேன், துணிகரத்துடனே வேலினைக்கொண்டு சூழ்ந்தவை யோடிடச் செய்வாய், அணிமணி யார மார்பனே தேவா ஐயனே சுப்பிரமண்ணியனே. (8)

மிகவரும் பசிபு மயக்கமுஞ் சோர்வு மேவிநான் வருந்திடும் வேளை, தகுதிமி யெனுமத் தளவொலிகேட்பச் சதங்கைகாலரம் பையாட, திகழ்மயின்மீதி லேறியேவந்துன் சேவைதந்தமுது தேன்பழமும், அகமகிழ்வாகச்செய்தருள்பழனி யப்பனே சுப்பிரமண்ணியனே. (9)

கிட்டியே நமனார் தூதர்பாசத்தாற் கெட்டியாய்ப் பிணித்திழுத்திடுங்கால், மட்டிலாத் துயர முற்றுனை நினைந்து வணங்கலா மெனிற்கப மயக்கம், கெட்டியாயறிவை யொடுக்கிடு மதனாற் கேசவன் மருகனே யமுதக், கட்டியே யென்றேற் கருள்புரி பழனிக் காங்கையா சுப்பிரமண்ணியனே. (10)

சத்துருவாகத் தீயவரென்னைத் தாக்கிடுவாரெனி லன்று, சத்துவங் கெடவே யவர்களை யொடுக்கித் தமியனைக் காத்திடு மையா, பத்தியிலசுரர் குலங்களை யெல்லாம் பாழ்பட வதைத்த வேற்கந்தா, புத்தியுமிக்க போதஞ்சேர் பழனிப் பொருப்புறை சுப்பிரமண்ணியனே, (11)

சல்லியம் பில்லி சூனியவகையாஞ் சாத்திரங் கற்றிடுங் கசடர், சொல்லிய வசிய மாதிமாரணமாய்ச் சோர்விலா வெண்வகை யென்னைப், புல்லிடச்செயினு மகற்றியே யந்தப் புலையரை யழித்தருளையா, வல்லமாமயூர வாகனு பழனி மன்னவா சுப்பிரமண்ணியனே. (12)

ஆற்றினிலிறங்கி யக்கரை வருமுன் னதிகநீர் பெருகியே வந்தால், போற்றியே மனதி லுனைநினைந் தன்பாய்ப் புகல்கின்ற வேளையிலுற்று, ஏற்றமாம் பெருக்கைத் தடுத்தெனைக்கரையி லேறிடவருள்புரி மலர்கள், தூற்றியே யமரர் துதித்திடும் பழனிச் சுந்தரா சுப்பிரமண்ணியனே. (13)

மதம்பொழி காட்டு யானைகள் வந்து வளைத்தெனைமிதித்திட வந்தா, லிதம்பெற வுனது திருவடி மனதி லெண்ணுவே னக்க ணங் கரிக, ளதங்கொளவடித் தேயடியெனைக் காப்பா னையங்க ரன் பின்வரு முருகா, பதந்தரு குருவே பழனியம்பதிவாழ் பண் புறுஞ் சுப்பிரமண்ணியனே. (14)

மாகத நீல மாணிக்கவண்ண மகிழ்ந்துகோனக மஞ்ஞைத், தாகதம்பூண்ட விரதத்திலேறித் துரிதமாய் வரந்தர வருவாய், சரவணபவனே குருபாகுகனே சகலலோகம்பணி பாதா, அரகரா முருகா பழனியம்பதிவா ழுப்பனே சுப்பிரமண்ணியனே. (15)

வரிப்புலிசிங்கங் கணத்திற்கையோங்கி வாய்திறந்தெனதுமே லெதிர்த்தால், திரப்பட வுன்னை மனதினினினைப்பேன் தேசிகா வெந்தன்முன் வந்து, விரித்தவாய் வேங்கை யாளியை விளங்கும் வேலினால் வதைத்தெனைக் காப்பாய், தாத்தரு முனது கருணை செய் பழனிச் சண்முகா சுப்பிரமண்ணியனே. (16)

ஆர்ப்பரித்தெழுந்து தடத்தினிற் கள்ள ரடித்தெனைப் பறித் திட நினைந்தால், வேர்ப்பறித் தசுரர் குலங்களை வீட்டும் வேலவா யென்றன்முன் வந்து, சீர்ப்பதச்சேவை தந்துமே யன்றோர் சிரம் விழப் போரது புரிந்து, காப்பதுன் செயலே பழனிமாமலைவாழ் கர்த்தனே சுப்பிரமண்ணியனே. (17)

அற்புத வடிவா முற்பெற வருவா யசுரரை வதைத்ததிண் புயனே கற்புரச் சுடர்போல் மெய்ப்பொருடருவாய் கர்த்தனே மயின்மிசை யேறி, சொற்பனந்தனிலுங் கண்டுகண் களிப்பச் சோதியே சுடரொளி வேலா, தற்பரா யெனையாள் பழனியம்பதி வாழ் தாரகா சுப்பிரமண்ணியனே. (18)

காட்டினிற் றனியே செல்கின்ற நேரங் கார்முகிலிடி மின்னல் காற்று, மூட்டியே கலந்து பொழிந்திடருற்றால் முருகையாவென் றுனை நினைப்பேன், ஒட்டியே மயில்வாகனத்தினிலேறி யூற்று மம் மழையை நீ தடுத்துக், கூட்டுவாயருளைப் பழனிமா மலைவாழ் கொற்றவா சுப்பிரமண்ணியனே. (19)

வழிதனிற் றனியே செல்கின்ற நேரம் மறித்தெனைப் பகைவர் வந்தெதிர்த்தால், குழறிய சொல்லோ டிருதயங் கலங்கிக் குமரனே யென்றுனை நினைக்க, பழிபடவவர்கள் சிதறிடநீயும் பசுமயில் மீதினில் வந்தே. யழிவுறவியற்று மற்புதப்பழனி யாண்டவா சுப்பிரமண்ணியனே. (20)

வேங்கையின்வடிவாய்த் தினைப்புனத்திருந்த வித்தகா சரவண பவனே, ஓங்கிய துன்பம் பலபிணி பீடை யூறுசெய்யிடும் பைகளென்னை, நீங்கிட விலக்கி நிமிடத்தில் காத்து நீறெனக்கருளுவாயையா, காங்கையா கழுகு மலையுளாய் பழனிக் கர்த்தனே சுப்பிரமண்ணியனே. (21)

மீறிய மூர்க்க நாகங்களென்னை விடநிறை பற்களாற் கடிக்கச், சீறியே சூழ்ந்து வந்திடி லுன்றன் றிருவடி நினைந்துநான் றொழுவேன், ஊறிய கருணைக் காங்கையா மயில்மே லுவந்துவந் தன்பொடு முன்னின், றேறியவிடத்தை யிறக்கியாள்பழனி யிறைவனே சுப்பிரமண்ணியனே. (22)

காளிகள் பேய்கள் சடாமுனி பூதங் கறுத்திடுங் காதகர் துஷ்டர், கூளிகள் முதலா மனைவருமென்னைக் கொடுமையைப் புரிதா லுற்றால், வாளினாலவற்றை விலக்கிநீ காப்பாய் வணக்குற வள்ளிமாதுவக்கும், வேளென நின்ற வித்தகா பழனி வேலவா சுப்பிரமண்ணியனே. (23)

நிச்சயமாக நினைந்துனைப் பூசை நிரந்தரஞ் செய்தடி வணங்கி அச்சுதன் மருகா வற்புத முருகா வசுர சம்மாரனே குகனே, கச்சணிதனத்து வள்ளிதெய்வானை காந்தனே குமரனே யென்று, நிச்சலுந்துதித்தேன் பழனிமாமலைவாழ் நிமலனே சுப்பிரமண்ணியனே. (24)

மெய்யனென்றுனையே நம்பினபேர்க்கு மெய்ப்பொருடந் தருள்புரிவாய், பொய்யனென்றுனையே யிகழ்ச்சிசெய்வார்க்குப் பொருவிலா வினைகளைக் கொடுக்கும், அய்யனே துய்யா வுனைவிட வெனக்கோ ராதரவெங்கணுங் காணேன், செய்யனே முருகா பழனியங் கிரிவாழ் தேசிகா சுப்பிரமண்ணியனே. (25)

அடித்திடுஞ் சுரமுந் தலைவலி மயக்க மாதியாம் பிணிபல வடைந்தோர், துடித்தென விடத்தி லுரைத்தனராகில் துணையடி துதித்தலையன்றி, படித்திலேன் வேறு மந்திர மறியேன் பாடுமிம் மாலையை செபித்துக், கொடுத்தருள் நீற்றைப் பழனிமாமலைவாழ் கொற்றவா சுப்பிரமண்ணியனே. (26)

அறிந்தறியாமற் செய்திடும் பிழையை யாண்டவா பொறுப் பதையன்றி, செறிந்திட மனதில் குற்றமாய் வைத்துத் தெண் டனை செய்வது நன்றோ, நெறிந்திட வசுரர் கிளைகளை மாய்த்து நீணிலமீதினிலெவரும், முறுங்கதிபெற நீய நள்செய்வாய் பழனி யுத்தமா சுப்பிரமண்ணியனே. (27)

வாருமென்றுனையே மனதினில் நினைத்தால் வந்துநின் றடி யர்முன் கந்தா, சேருமென்றுனையே கேட்டநல்வரமு நீதியா யன் பொடு கொடுப்பாய், காருநின்றுலவும் பொழிபுடையிலகு கருது சண்முகநதியுலவு, பாருளெங்கணுமே துதித்திடும் பழனிப் பதி யுளாய் சுப்பிரமண்ணியனே. (28)

காலைமாலையிலுன் சடாட்சரஞ் செபித்துக் கந்தநீ துணையென விருந்தேன், ஆலைவாய்க் கரும்புபோல் மனம் நைந்தே னுதா வென்ன சொல்லையா, நூலை நேரிடையார் வள்ளிதெய்வானை நோக்கிடு துவாதச வாகா, சோலைமாமயில்மீ தேறுவோய் பழனிச் சுந்தரா சுப்பிரமண்ணியனே. (29)

அனுதின முன்னை மனதினில் நினைத்தே யருச்சனை செய்வ தை யன்பாய், உனதகமுணராச் செய்கையோவேலா வுதுபகை வென்றிடுந் தீரா, மனதிரங்காமல் மௌனநீசெய்து வருத்துத னீதியோ குறவர்; வனிதைநாயகனே பழனியம்பதிவாழ் வந்த ருள் சுப்பிரமண்ணியனே. (30)

காவிவத்திரநீ ருத்திர நயனக் கண்டிகை மாலையும் புனைந்து, நாவினிலுனது புகழினையோதி நன்மனத்தாறெழுந் துன்னி, மேவியானிருந்தேன் வேலவா கருணை வெள்ளமே யடியவனெதி ரில், தாவிடு மயின்மேல் வந்தருள் பழனிச் சண்முகா சுப்பிரமண் ணியனே. (31)

இரமுடனையுங்கிலியுமே கிரியுஞ் சேர்ந்திடு மக்காத் தொளி ருஞ், சரவணபவனே யறுமுக குகனே சடாச்சரப் பேருறை குழகா, புரமெரி செய்த சிவனருள் பாலா புவனமுண்டோன் றிரு மருகா, அரகர முருகா வருள்செய்வாய் பழனி யப்பனே சுப்பிரமண்ணியனே. (32)

கந்தனே யுமையாள் மைந்தனே வுன்னைக் கருத்தினி லிருத் தியான் றுதித்தேன், வந்ததோர் வினையும் வளர்ந்திடும் பிணியும் வறுமையுந் தவிர்த்தருளையா, பைந்தமிழ்ப் பாவாற் பாடினேன் குமாரா பராபரா வருள்புரிநாதா, சிந்தனைகொண்டு காத்தருள் பழனிச் சிற்பரா சுப்பிரமண்ணியனே. (33)

அய்யனே குமாரா வறுமுக வடிவே லரகரா சண்முகா முரு கா, மெய்யனே பழனி மேவியகுகனே விமலனேயாறிரண்டான, கையனே கடம்பா சரவண பவனே களிமயிலேறியே வருவாய் செய்யனே துய்யா திருவடி யருள்வாய் சேவகா சுப்பிரமண் ணியனே. (34)

வேலவாவென்று விஞ்சைகளோத வெருண்டிடும் பேய்க ளும் பூதம், வேலவாவென்று விபூதியை யணிந்தால் விலகிடும் பிணிகள் பைசாம், வேலவா வென்று வேள்விகள் செய்தால் வெகுசெல்வம் பாக்கியஞ் சேரும், வேலவா வென்றே துதித்த னன் பழனி வெற்புறை சுப்பிரமண்ணியனே. (35)

குருபர குகனே யறுமுகவேலா குன்றினில் வாழ்கின்ற முருகா, ஆனந்த புதல்வா கதியுனையன்றி யாரெனக் கருள்புரி கந்தா, சரவணபவனே சண்முகாவடிவேல் சடாட்சரப் பொரு ளதாம் நாதா, திருமகள் மருகா பழனியம்பதிவாழ் செல்வனே சுப்பிரமண்ணியனே. (36)

சூரனைவதைத்த வேல்தனையெடுத்துச் சூழ்ந்திடும் பேய்க ளைத் துரத்தும், வாரணி முலையாள் வள்ளிதெய்வானை மங்கையர் நாயகா முருகா, தாரணிமார்பா வுனதடியன்பாய்ச் சாற்றிட வருள்புரியையா, சீரணிபழனிச் சண்முகாநந்தா சிவசிவா சுப்பிர மண்ணியனே. (37)

வாசவன் மருகா குமரனே முருகா மயில்தனி லேறியே வந்து, நேசமாய்ச்சிறியே னனுதினந்துதித்தால் நிந்தனை வாராம லே காப்பாய், மோசஞ்செய்தோரை வாட்கிரையிடுவாய் முத்த னே கர்த்தனே யையா, ஆசையாயுனையே நம்பினேன் பழனி யாண்டவா சுப்பிரமண்ணியனே. (38)

ஆதியேசோதி யையனேபழனி யறுமுக வேலவா முருகா, நீதியாயுன்னை நம்பினபேர்க்கு நின்றருள் புரிகுவாய் குமாரா, சோதியே சொரூபா சண்முகநாதா சூரனைவதைத்தவேற் கந்தா, ஓதியுன்றுமந் தனைச்செபித்தோருக் குதவிசெய் சுப்பிரமண் ணியனே. (39)

நித்தமும்பழனி மலைதனில்வாழும் நிமலனேகுருபர குகனே சத்தியின் புதல்வா சண்முக குழகா தந்திமாமுகற்குயர் துணைவா, புத்தியுமுத்தி கொடுத்திடு முருகா புதல்வனைக்காத்தருள் புரிவாய், பத்தர்கள்போற்றும் பன்னிரு கரத்தாய் பராபரா சுப்பிரமண் ணியனே. (40)

காலையுமாலை நீனைந்துன்னைத் துதித்தால் கவலையும் பிணிக ளுந் தீர்ப்பாய், சீலமாயுனது சடாட்சரஞ்செபித்தாற் றீயவை யாவையுந் தகிப்ப, சோலையில்வாழு மயில்தனிலேறுஞ் சுந்தரா வுனதடி மறவேன், மேலதாம்பதவி கொடுத்தருள்பழனி வித்தகா சுப்பிரமண்ணியனே. (41)

கார்த்திகேயாசேய் கடம்பனே யென்று காவடிதோளினில் வைத்தே, எத்திசையுன்னை நாற்றிசையுள்ளோ ரிணையடி போற் றுறுங் குமாரா, சாத்திரப்படியே யனுதினந்துதிக்கச் சகல வல் வினையையுந் தீர்க்கும், தீர்த்தனே சேவற் கொடியனே பழனிச் சின்மயா சுப்பிரமண்ணியனே. (42)

வரைமகள்பாலா வள்ளிமணாளா மாமயிலோய்மலர்க் கடம் பா, நூமுளசேவற் கொடியுடை வேலா யும்பர்கணாயகன்மருகா, திரமுடன் சிங்க சூரனை வதைத்த திடவடி வேல்முருகையா, பரமனேயென்று துதித்தனன்பழனிப் பதியுளாய் சுப்பிரமண் ணியனே. (43)

சங்கர சம்பு சதாசிவகுமாரா சரவணபவகுக முருகா, கங்கை யின்பாலா சக்கரமேந்துங் காருத்தன் மகிழ்ந்திடு மருகா, இங்கு வந்தென்னை யாண்டருளையா யிணையடி யருச்சனை புரிந்தேன், செங்கையில் வேலை யேற்றவாபழனிச் சிற்பரா சுப்பிரமண் ணியனே. (44)

மகரத்தில்பூச நாளினில்தேச மன்னர்கள் யோகிகள் களிப் பத், தகதித்தியெனவே தாளங்கள்போட தாசிகள் நாட்டியமாட, பகல்வத்தி விளங்க பருமுரசதிரப் பல்வளம் பொருந்திய பழனி நகரத்தில்கோலம் நான்கண்டுதொழுதேன் நன்கருள் சுப்பிரமண் ணியனே. (45)

வாரணிமுலையாள் வள்ளிமாதுள்ளா வாரணங்காத்தவன் மரு கா, சீரணிபழனித் தேசிகா முருகா செந்தமிழ் பாவலா போற் றும் காரணகுருவே காங்கையாகந்தா கர்த்தனே நித்தியங் கடப் பத், தாரணிபவனே யடியெனைக்காப்பாய் தயாபரா சுப்பிரமண் ணியனே. (46)

சுத்தமாய்நின்ற பிரமசொரூபந் துலங்கிட மயிலின்மீதேறி, சித்தர்கள் முனிவர் தேவர்கள் மகிழ்ந்து திருவடி துதித்திட விளங்கும், அத்தனேயமலா வறுமுகவிமலா வச்சுதன் மெச்சிய மருகா, வத்திமாமுகனுக் கிளையவாபழனி யாண்டவா சுப்பிரமண் ணியனே. (47)

மீனத்தில்பானு மேவிடுமாதம் விளங்கியாதத்தினி லேறி, ஞானத்தில்மிக்க முத்தர்கள் யோகர் நனிகளிப் புறக்குழாத்திகழ, வானத்திலமரர் பூமழைபொழிய வையகத்தடியவர் தொழுவார், யீனத்திலொன்றிப் பாவினன்பழனி யிறைவனே சுப்பிரமண் ணியனே. (48)

பலகலைகற்றோர் சகலருந்துதிக்க பாக்கியந்தருள் முருகா, கலகலவென்று காவடிகொண்டு கதித்துவந்தோர்களைக் காப்ப, மலைதனிலிருந்து மயில்தனிலேறி வலப்புறமாகவே வருவாய், நிலைபிரியாமல் நின்றருள்பழனி நீதியாய் சுப்பிரமண்ணியனே. (49)

அசுரரை வதைத்துத் தேவரைச்சிறைமீட் டதட்டியே பேய்களைத் துரத்தி, நிசியிராக்கதரை வென்றிடும்வடிவே னிலைசிவகிரிமிசை நின்னை, கசிவுடன்றினமுங் காலமேயெழுந்து கர்த்தனே யென்றுநீரணிந்தேன், பிசகுவாரம லாண்டருள்பழனி பிரபலா சுப்பிரமண்ணியனே. (50)

தாய்தந்தை குருவும் நீயலாற்பின்னை தானுண்டோ யிப்புவிதனிலே, பேயனுகியநானின்புகழ்சொல்லிப் பேணியேவனுதினந் துதிக்கப், பாய்புலிபில்லி சூனியமெவையும் பறந்துபோம்படியருள் புரிவாய், மாயவன் மருகா பழனிமா மலைவாழ் வள்ளலே சுப்பிரமண்ணியனே. (51)

அய்யனேவுனையே நம்பினேனென்னை யாண்டருள் பழனியங்கிரியாய், மெய்யர்கள்மெய்ய னெனப்பெயர்படைத்த வித்தகா வறிவிலாச்சிறியேன், கையவுமுனது திருவுளமிரங்கி ரட்சியாதிருந்ததேன் கயிலைப், பையரவணியும் பரமனீன்றருளும் பாலனே சுப்பிரமண்ணியனே. (52)

மாவலியசுரனிடத்திலே மாயன் மறையவன்போலுரு வெடுத்துப், பூவுலகெல்லா மோரடியளந்த புனிதனுர் மருகனேயுன்னை, நாவினுற்புகழ்ந்து மனத்தினுற்றுதிக்கும் நாயடியோங்களைக்காப்பாய், ஆவினன் குடிவாழ் பழனியங்கிரியா னையனே சுப்பிரமண்ணியனே. (53)

பாசபந்தயங்கள் பேசிடுஞ்சமணர் பராக்கிரமந்தனையழித்து, கூசிடக்கழுவி லேற்றியேவைத்த கொற்றவா வறுபடைவீட்டில், வாசமாய்க் குடிகொண் டிருந்திடுங்குமார! வாசவன் போற்றிய மருகா, ஆசையாயுன்னை யண்டினேன்பழனி யற்புதா சுப்பிரமண்ணியனே. (54)

குன்றுதோருடல் கொண்டிடுமுருகா கோதிலாச் சிவனருள் புதல்வா, யின்றுனைப்பணியா திருந்ததேனின்ன மென்றன்மேற் பாராமுகமேனே, சென்றுயர் புனத்தில் வள்ளிகைப்பிடித்த தேவனே நீமனதிரங்கி, நன்றுவந்தெனையாள் பழனியம்பதிவாழ் நாயகா சுப்பிரமண்ணியனே (55)

தலைமெலாஞ்சுற்றி வலமதாய் வந்த சடாட்சர மந்திரப் பொருளே, மலையுளாயுனது செயலெலாமென்றன் வாயினாற் சொல்லவு மெளிதோ, அலைகடற்றுயி லுமாதி மால்மருகா வண்டின பேர்களைக் காப்பாய், சிலைமதற் பழித்தோர் வளர் பழனிக்குட்டேசிகா சுப்பிரமண்ணியனே. (56)

காலனைக் காலாலுதைத்தவ னெங்கள் கயிலையம்பதியில் வாழ் மூர்த்தி, பாலகா பச்சை மயில் மிசையேறி பத்தரீடேறிட வருவாய், மாலவன் மருகாமயூர வாகனனே மலைமகள் புதல்வனே நித்தம், ஓலமென்றுரைக்கு மெனக்கருள் பழனியுத்தமா சுப்பிரமண்ணியனே. (57)

சதாசிவனீன்ற துரைமுருகையா சத்ருசங்கார வேற்கையா, உதாசினம் பேசுமீனர்பாற் சென்றேயுலையினில் மெழுகுபோலுருகி, யிதாகிதம்பேசி யலைகின்ற பொல்லா வினைத்தை யகற்றிடு மார்க்கம், சுதாவினில் வந்து காத்தருள் பழனிச்சோதியே சுப்பிரமண்ணியனே, (58)

மாங்கனிக்காக பூமியை வலமாய் வந்திடு மாகத மயில்மேல், தேங்கமழ் கயிலை சிவன்றனை வலமாய் சேர்வதன் முன்னர் சிந்துரத்தான், ஆங்கவன்றனக்குக் கனியை யீய்ந்திடவு மாவினன் குடிமிசையுற்றாய், ஓங்கிவாழ் பழனிமலை மிசையுற்ற வுத்தமா சுப்பிரமண்ணியனே. (59)

ஈனமாமுடலை யெடுத்திந்தப் புவியிலெத்தனை பாடுபட்டலையத், தானும் வைத்தனையே பழனிமாமலைவாழ் சண்முகா விண்ணிசை யுலவும், பானுகோடியை நேரொளி கொள் வேல் தண்டு பன்னிரு கையிலுமேந்தி, மேனினைக்கின்ற வேலை யென்றுயாம் விலக்கிடும் சுப்பிரமண்ணியனே, (60)

காரணப் பொருளே கங்கைதன் மைந்தா கயிலைவாழ் சிவனருள் புதல்வா, ஆரணத்துரையே யறுபடை வீட்டிலமர்ந்திடும் புண்ணியமூர்த்தி, பூரண கடாட்சமென்றன்மேல் வைப்பாய் புகழ் பழனுபுரி புனிதா, நாரணன்மருகா நம்பினேனென்னை ரட்சியாய் சுப்பிரமண்ணியனே. (61)

பத்தரை மாற்றுப் பசும்பொன்னின் சுடரைப் படிப்பிலாக்
குருடனைனாக, எத்தனை தவந்தானியற்றினேனையா வென்
பழனுபுரித்தலைவா, பித்தனாகிய நானறிவனோ வென்னபிழை பொ
றுத்தாள்வதுன் கடனும், அத்தனீன்ற புத்திரமணியேயப்பனே
சுப்பிரமண்ணியனே. (62)

உலகம் யாவையுமுண்டுமிழ்ந்தளந்திடந்தே வோங்கிய மாத
வன் மருகா, நலமுற வணங்கிப் போற்றுவோர் பாதம் நினைப்புட
னிரவொடு பகலும், தலைமிசை யேற்றுத் துதித்திடு மென்முன்
காட்சியில்லாமலே மணிகள், சுலகலகலென மயிலுகை பழனிக்
காங்கையா சுப்பிரமண்ணியனே. (63)

அந்திவண்ணன்றன் புதல்வனே புன்னை யனுதினங்கவிமலர்
சூட்டி, சிந்தையில் நினைந்து மானத பூசை செய்திடும்படியெனக்
கருள்வாய், விந்தையாய் பழனிமாமலை மேவும் வித்தகாசத்தி தன்
பாலா, கந்த நாயகனே கடாட்சம் வைத்தாளும் கற்பகா சுப்பிர
சுப்பிரமண்ணியனே. (64)

திருவணாமலையில் தேசிகனானை சிவனருள் பாலனே புன்ற,
ஒருவுமென் செயலுமாற்றிடுவா ருற்றதை நான் சொன்னேனே
னையா, கரிமுகன்றனைவா யறிந்தறியாமல் கனைபிழையிருப்பினு
மகற்றித், திருமுக மலர்ந்து காத்தருள் பழனி தேசிகா சுப்பிர
மண்ணியனே. (65)

வள்ளி தெய்வானை மணாளனே கயிலைவாழ் சிவனீன்றருள்
புதல்வா, கள்ளமாம் பில்லி வஞ்சனையேவல் கபடமாயவர்கள்
செய்தாலு, முள்ளநோயகற்றி சேவலங்கொடியாயுனை யெனதித
யத்தில் தொழவும், புள்ளிமாமயில் மீதேறிவா பழனிப் பொருப்
புறை சுப்பிரமண்ணியனே. (66)

சோலைசூழ் வையாபுரியனே புன்னைத் தொழும்டியார் கடம்
மனதில், எலவே நினைத்த காரியமெல்லா மிடரின்றி சித்திக்க
வருள்வாய், நீலமால்வரைபோல் மயின்மிசை யேறி நிமிடத்தில்
வந்துனதருமைப், பாலனைக்காக்கும் பழனியங்கிரியாய் பரமனே
சுப்பிரமண்ணியனே. (67)

அத்தியையுரித்து தோல்புனையானா ரருளிய சேயனே யானும், எத்தனைகோடி பாவ கன்மங்களியற்றினு மறிந் தறியாமல், மெத்தவே செய்தேயிருக்கினும் பொறுக்க வேண்டினேன்திரிபுர மெரித்த, அத்தனார் பாலா பழனியம்பதி வாழற்புதா சுப்பிரமண்ணியனே, (68)

வெற்றியாகவுமென் றம்பிகை சத்திவேலதை வாழ்த்தியே கொடுப்ப, உற்ற பன்னிருகை வாய்ந்த சண்முகனே புண்மையாய் தெரிசனைதந்து, குற்றமாங் குறைகளெவை யிருந்தாலுங் கொண்டு நீ பொறுத்தருளையா, பற்றலர் தம்மைச் செற்றுறைப் பழனிப்பதியுளாய் சுப்பிரமண்ணியனே. (69)

ஆலிலைமீதிற் பள்ளிகொண்டிலங்கு மாயிர நாமத்தையுடைய, மாலவன்மருகா மைந்தனா னுன்னை வாழ்த்திய கவிகளிதனை, மூலமே செவி பன்னிரண்டிருந்ததிலோர் செவியிலுங் கேட்கவு மிலையா, காலகாலன்றன் புதல்வனே பழனிக் கர்த்தனே சுப்பிரமண்ணியனே. (70)

இந்த வேளையினிற் சொந்தமா யெண்ணி யேழை யான் பிழைத்திடும்படியே, வந்தெனதகத்தின் மயக்கத்தை தீர்த்து மந்திர மனந்தனி னிறைந்துச், சிந்தை நோயிடர்கள் தீவினையெல்லாஞ் சிதறிடும்படிக் கருள்புரிந்து, யெந்தனையாள்வாய் பழனிமாமலை வாழெந்தையே சுப்பிரமணணியனே. (71)

வள்ளி தெய்வானை யிருபுற மிலங்குவசந்த மன்மதனென வயங்கிப், புள்ளிமாமயில் மீதேறியே யெனதன்புத்தியதுவப்ப நீ வருவாய், ஒள்ளியவளஞ் சேர்பழனிமாமலைமே லோங்கியதற் பரானந்தா, தெள்ளிய நான்கு கவித்திறமுதவுந் தேசிகா சுப்பிரமண்ணியனே. (72)

ஓலமிட்டழுதே யாறுபோற் கண்ணீரோட நானன்பொடும் பாடக், கோலமாமயில் மீதேறியே வந்து கொடுத்தருள் கண்ணருளையா, சாலவே வைகாபுரித்தடஞ் சூழுஞ் சண்முகநதி யதுகுலவும், சீலமார் பழனிச்சிவகிரிமேவுஞ் சிற்பரா சுப்பிரமண்ணியனே. (73)

கண்ணினாலுன்றன் தெரிசனங் கண்டுகாதலித்தருகு நின்னடியார், எண்ணெணாத்தவங்கள் செய்தவான்ரோ யேழையேனெத்தவம்புரிந்தேன், மண்ணினையளந்த மாயவன்மருகா மைந்தனைக் காப்பதுன்பாரமே, யெண்ணெணப் பொழில்சூழ் பழனிமாமலை வாழிறைவனே சுப்பிரமண்ணியனே. (74)

செங்கையை நீட்டி வேல்விழி நாட்டி சிற்றிடையினை யசைந்தாட்டி, கொங்கையைக்காட்டி யாசையை பூட்டிக் கொடுமைகள் பலமுற நீட்டி, மங்கையர் செய்யுமயல்தனையோட்டி மனமதையொருவழிப்பூட்டி, சங்கையிலருளையூட்டியாள் பழனித்தற்பரா சுப்பிரமண்ணியனே. (75)

திரிபுரதகனன் சேயனேயென்று தினமுனைத் தொழுதபேரிடத்தில், வாழுமென்மேலுஞ் செயலது புரிவாய் மாநிலந்தனிலுனையல்லால், பிரியமாய் மற்றோர் தேவரைப் பணியேன் பிழையெலாம் பொருத்தருளையா, அரியநான்மறைகள் பாவிடும் பழனியப்பனே சுப்பிரமண்ணியனே. (76)

அல்லி செவ்வந்தி மல்லிகை முல்லை யறுகு வில்வம் மகிழலரி எல்லையில்லாத மலரெடுத்துன்ற னிணையடிதனி லருச்சித்து, நல்லியல் சதகம்பதிக மந்தாதி நாயினேன் சொலவருள் புரிவாய், பல்லிய முழங்கும் பழனியம்பதிவாழ் பண்பனே சுப்பிரமண்ணியனே. (77)

பூதவேதாளம் பேயுடன் முனியும் பிரமராட்சதை முதற்பொல்லாச், சாதிகளுன்றன் பூதியை யணிந்து சடாட்சரந்துதிக்கு முன்னகல, நீதியாயருளைச் செய்வதுமென்றோ நித்தனாருளிய பாலா, கோதிலா வளங்கள் சூழ்ந்திடும் பழனிக்கொற்றவா சுப்பிரமண்ணியனே. (78)

சிகா கோபுரமுந் தேருகை வீதி தென்னை மா வாழையின்றோப்பும், புகரி பச்சிறப்பும் பொருந்திய பழனிப் பொருப்பமர் புண்ணியமூர்த்தி, தகுசிவனடியாரிடமதைப் பொருந்தி தாதனானெனவுனக்கடிமை, புகுமருள் புரிவாயாறிருபுயஞ்சேர் புண்ணியா சுப்பிரமண்ணியனே. (79)

தினைப்புனந்தனிலே வேடனும் வேங்கை செட்டி பண்டாரனுமாகி, வனங்புறங் குறத்தி வள்ளி தோள் சேர்ந்த வளரும் பன்னிருபுயகுழகா, இனத்துடனடியார் குழாந்தனி லேழை யேனு மங்கவரொடு சேர்ந்து, நினைத்த வையாவுமருள் செய்வாய் பழனி நின்மலா சுப்பிரமண்ணியனே. (80)

சூரணமாகச் சூரரைப் பொடித்த சுடர்வடிவேல் முருகையா, ஆரணப் பொருளே சிவகிரி வலம் வந்தன் பொடுபணியு நாளருள்வாய், நாரணன் மருகா நம்பினபேர்க்கு நல்வாம்புரிந்தலருய்ய, காரணத்தனேக காட்சிசெய் பழனிக்கர்த்தனே சுப்பிரமண்ணியனே. (81)

பேய்வளர் காட்டிலாடிய பாதன் பெற்றருள் புதல்வனே யென்று, வாயினுற்புகழ்ந் கண்ணினுலுன்றன் மலரடிதனைக் கண்டு வணங்கும், சேயனைக்காத்துத் துணைசெயாவிட்டால் செகமெலாமென் சொலுமையா, மாயவன் மருகா பழனிமாமலைவாழ் வள்ளலே சுப்பிரமண்ணியனே. (82)

பெண்டுடன் பிள்ளை தாய் தந்தை சுற்றம் பிரபலமான தம்பியரும், செண்டு செண்டாக யாரிருந்தாலுஞ் சிறியனேற் குறுதுணையுண்டோ, அண்டினே னுனை யாதரிப்பவ ரரப்பனே யொப்பிலாமணியே, அண்டர்கள் பரவும் பழனிமாமலை வாழந்புதா சுப்பிரமண்ணியனே. (83)

நடக்கின்றபோது மிருக்கின்றபோது நானிலந்தனிற் மிகப் பிணியாற், கிடக்கின்றபோதும் பழனியை முடுகி கிட்டியே சமனதுதூதர், மடக்கவே வரும் போதந்த வேளையிலுன் மந்திரம் புகலுமாறுதவி, கொடுத்தெனையாள்வாய் பழனிமாமலை வாழ்கொற்றவா சுப்பிரமண்ணியனே. (84)

பேயனைப்போல வலைந்தலைந் துழன்று பிரமைகொள்வன் மனமலைத்து, காயமுமெலிந்து பாதவிக்கின்ற காலத்திற் கலைகளையாயா, மாயவன் மருகா பழனிமாமலை வாழ்வள்ளலாகிய கனதுரையே, நீ யெனையஞ்சேலென வந்து புகல்வாய் நித்தனே சுப்பிரமண்ணியனே. (85)

சண்டனையுதைத்துத ரணியில் வீழ்த்துஞ் சதாசிவனருளிய பாலா, கொண்டல் வண்ணனுக்கு நேர்ந்துள மருகா குன்றுதோறாடிய முருகா, தெண்டனையான பந்தபாசத்திற் சிக்கியிப்புவனியிலுழன்ற, தொண்டனைக் காப்பாய் பழனிமாமலை வாழ் தூயனே சுப்பிரமண்ணியனே. (86)

படியதில சூரன்மலையது பிழவுபட வொருகொடிதனில் வடிவேல், இடியதுபோல விடுத்தவர் குலத்தையெலாம் பொடியாக்கிய தீரா, மிடியதாற் புவிமேற் கசடர்பாற் சென்று விதனத்தை விளம்பிடாதருள்வாய், அடியார்கள் கேட்ட வரந்தரும் பழனியாண்டவா சுப்பிரமண்ணியனே. (87)

ஆரணப்பொருளை யகத்திய முனிவர்க்கருளிய சடாட்சர முதல்வா, காரணத் துரையே கந்த நாயகனே கடைக்கணாற் பார்த்தருளையா, நாரணன் மருகா வாவினன் குடிவாழ் நாயகா தூய சன்மார்க்கம், பூரணவடியார் புகழ்ந்திடும் பழனிப்புனிதனே சுப்பிரமண்ணியனே. (88)

கங்கையார் சரவணந்தனி லுதித்துக் கல்வரர் மசுரரை வதைக்கச் செங்கை வேலேந்தி தேவரைக் காத்த தெய்வ நாயக மணி விளக்கே, தங்கனே கந்தா சுவாமி யென்றன்னைத் தொழுதிடு மடியவன் முன்னே, மங்களத்துடனே வந்தருள் பழனிமலை வளர் சுப்பிரமண்ணியனே. (89)

பொன்னுரைக் கண்ணரிரணியன் புகலப் பொருந்து பொற்றாணதின் முளைத்துச், சின்ன பின்னங்களாகவே யுடலைச்செற்று நற்கொற்றமே தரித்தே, அன்னவன் பிரகலாதனுக் கருளு மகீதெனப்புவியின் மேற்பாடும். என்னை நீ காத்து ரட்சிப்பாய் பழனியேந்தலே சுப்பிரமண்ணியனே. (96)

அறுபதினன்கு திருவிளையாடலாதி யாங்கூடலியற்றும், திறமுறு பொருளாஞ் சிவனருள் பாலா திருத்தொண்டர் தமக்கனுகூலர், சிறுவனை யிகழேல் புன்மொழிப் பாடல் செவிதனிற் கேட்டருள் செய்வாய், குறுமுனி பணியும் பழனிமாமலை வாழ் கொற்றவா சுப்பிரமண்ணியனே. (91)

மேருவை நேரும் பன்னிரு காமும் மேன்மைசேர் திவ்ய சண்முகமும், சீருரை வள்ளி தெய்வயானையு நேர் சேர்ந்திடமஞ்ஞைமேல் வந்தாள், வாரிசத் தடஞ்சூழ் பழனிமாமலைமேல் வயங்கிய தண்டபாணியனே, சூரிய கதிர்வேற் குமரனே சமரக் கொற்றவா சுப்பிரமண்ணியனே. (92)

தும்பிமாமுகனுக் கிளைய வேல்முருகா சூரசம்மார வைபவனே, அம்பிகை பாலா வானருள் புதல்வா வச்சுதன் மெச்சிய மருகா, உம்பரார் யானை வள்ளிக்கு நாதாவுலகுளோர் தமக்கெலாந்நாதா, நம்புமெற்கருள்வாய் பழனிமாமலை வாழ் நாதனே சுப்பிரமண்ணியனே. (93)

மட்டறப் பெரிய வண்டாண்டங்கள் மலைமுதற் பஞ்ச பூதங்கள், அட்டதிக்கயங்களாட நீ மயில்மேலாடிய நடனமாரறிவார், துட்ட வஞ்சகனுய் வறிஞனுயிடினுந் துணிந்துனைப்பாடுமெளியேன், கிட்டவந்தென்னைக் காத்தருள் பழனிக்கையனே சுப்பிரமண்ணியனே. (94)

அண்டர் லோகத்திலிந்திரன்றேவ ரதிகமாதவம் புரிவோரும், மண்டலத்தன்னி லுனையன்றி யாரை வழுத்தினர் செழித்தவாரணத்தாய், தெண்டனிட்டுன்றன் றிருவடி துதிக்குஞ் சிறியனை யிகழ்ந்திடா தருள்வாய், பண்டுளவாறு படையகத் தொன்றும் பழனிவாழ் சுப்பிரமண்ணியனே. (95)

எந்தையே யெவற்குந் தந்தையே யேழைக்கிரங்கிய சிந்தையாரிறைவா, அந்தமாம் வேதம் மறையவரோத வண்டர்கள் பதிநிதம் வாழ்த்த, சுந்தரவதன வள்ளி தெய்வானைத் தோகையரிருபுற மிலங்க, சந்ததம் பழனிப்பதிமிசை வாழும் தற்பரா சுப்பிரமண்ணியனே. (96)

சுடர்வடி வேலும் பன்னிருகாமுந் தோன்றி நாயேனிசை கேட்டு, நடனமிட்டிலவும் யின்மிசையேறி நாடொறுங் காப்பதுன்பரமே, தொடர்கன வாற்றுப் படையது வினவி தூய நக்கீரனைக் காத்து, திடமருளியவா பழனிமாமலை வாழ் செம்பொனே சுப்பிரமண்ணியனே. (97)

திருப்பரங்கிரியுஞ் சீரலைவாயுந் திருவாவினன்குடி மற்றும், விருப்புள திருவேரகங் குன்றுதோறும் விளைபழ முதிர்ந்திடுஞ் சோலை, உருப்பொலியாறு படை வீடு மமர்ந்த வுத்தம குருவெனப் புகல்வேன், தருப்பொலி சோலைப் பழனிமாமலை வாழ் தற்பார சுப்பிரமண்ணியனே. (98)

சூர்தலை வலியுங் குளிரொடு காய்ச்சல் குலவிய தோடமாஞ் சன்னி. யார்பிரமேகம் நீரிழிகுன்ம மட்டகாசஞ் சயரோகம், பார்வை கொப்புளமும் குடைச்சல் விப்பிரிதி பலவித நோய்களைத் தீர்த்துச் சிருறவருள்செய் பழனியம்பதிவாழ் தெய்வமே சுப்பிரமண்ணியனே. (99)

காவடி யெடுத்தென் தோளிலே வைத்துக் கந்தனே குமரனே முருகா, மாவடிவுடைய வேளெனத் துதிப்பேன் வந்தருள் சிந்தையிற் கூறும், பாவடியதனைக் கேட்டுள மகிழ்ந்து பாலிப்பதுன் கடனன்றோ, மூவடி கேட்ட மால் புகல் பழனி முன்னவா சுப்பிரமண்ணியனே. (100)

வாழி

சதுர்மறையும் வாழி யந்தணர்கள் வாழி க்ஷத்திரியர் வைசியர் சூத்திரரும் வாழி, பதுமனரியான் வாழி முகிலும் வாழி பைங்கூழ்கள் வாழி யிருநிதியும் வாழி, விதுவினொடு சூரியனும் வாழி யிந்த மேதினியும் வாழி நாயேன்றன்புன்சொற், றுதி பழனிப் பதிமேவுஞ் சுப்பிரமண்ணியர் தோத்திரப்பாமாலை சொல்வோர் வாழி மாதோ.

சுப்பிரமண்ணியர் தோத்திரப்பாமாலை சம்பூர்ணம்,

சென்னை கிருஷ்ண விலாச பிரஸ், கோயமுத்தூர்.

உங்களுக்கு ஓர் நல்லதிர்ஷ்டம்.

குறைந்த கிரயம்! **நிறைந்த ஆரோக்கியம்!!**

நரசிம்ம லேகியம்.

இந்த லேகியத்தைக் கற்பத்திற்குச் சமானமுள்ளது என்று எல்லா ஆயுர்வேத பண்டிதர்களும் புகழ்ந்து கூறத்தக்கது. இதற்கு நிகரான ஓர் ஔஷதம் வேறு இல்லையென்று உறுதியாய்ச் சொல்லுகிறோம். தாதுவிருத்தி உண்டுபண்ணுவதிலும், காசம் முதலான நோய்களை நீக்குவதிலும் ஹிருதயம், மூளை நரம்பு முதலான இராஜ கருவிகளுக்கு வலுவைத் தருவதிலும் தேவாமிர்தம் போன்றது இதுவே.

பல பேர் விளம்பரஞ் செய்திருக்கிற விலை இதற்குப் பொருத்தமானதே. ஆனால் ஏழைகள் வாங்கியுண்ண முடியாதென்று நாங்கள் ஷை மருந்திற்கு குறைந்த விலையை யேற்படுத்தி விற்று வருகிறோம். இந்த 27 வருஷங்களாக நாங்கள் இம்மருந்தை அநேகம் பேர்களுக்கு கொடுத்து உண்மையில் குணத்தை யறிந்திருக்கிறோம்.

அயம், காந்தம், அப்பிரகம், தங்கம், வங்கம் முதலான பஸ்ம செந்தூரங்களில் தனித்தனி ஓர் மண்டலம் ஷை மருந்துடன் கிரமமாக உண்ணில் தீராத ரோகமில்லை என்பது உண்மை. தனி மருந்து ஒரு மண்டலம் உண்டபின் ஷை பஸ்ம செந்தூரங்களில் தனித்தனி ஒரு மண்டலமோ அல்லது இஷ்டமுள்ள கால பரியந்தம் சாப்பிடலாம், பத்தியமில்லை ஒவ்வொரு பஸ்ம செந்தூரங்களுடன் மருந்து சேர்ந்து கிரயம்.

அயம்	ஒரு மண்டலத்திற்கு	ரூ.	12—8—0
காந்தம்	,,	,,	12—8—0
அப்பிரகம்	,,	,,	20—0—0
தங்கம்	,,	,,	35—0—0
வங்கம்	,,	,,	10—0—0
தனி மருந்து	,,	,,	5—0—0

2. சகல வாயுக்களையும் போக்கும் கோரோசனாதி சூர்ணம் 1 மண்டலத்திற்கு வேண்டிய மருந்து ரூ. 2—8—0

3. கழல்வாதம், முதலான பீஜ ரோகங்களைப் போக்கும் வஜ்ர பீஜத்தைலம் 7 நாள் மருந்து விலை ரூ. 2—8—0

4. பக்ஷவாதம் முதலான வாத சம்பந்தமானதுகளுக்கு மேற்பூச்சுத்தைலம் ½ புட்டி விலை ரூ. 3—8—0

5. பிரமேகம், வெள்ளை, வெட்டை கைக்கறுப்பு, மெய்ப் புள்ளி, தடிப்பு முதலானவைகளை நீக்கும் சகல மேகரோக நிவாரண சஞ்சீவி எண்ணெய், 24 நாள் மருந்து விலை ரூ. 5—0—0

6. மேக ரணங்களைப் போக்கடிக்கும் மேகாரண, நவநீதம் 7 தடவைக்கு உபயோகிக்கும் மருந்து ரூ. 1—0—0

7. மேகாரணம், அழிபுண் முதலானதுகளை நிவர்த்திக்கும் மேகாரணக்களிம்பு 7 தடவைக்கு உபயோகிக்க ரூ. 1—8—0

8. கண்சிவப்பு, கண் எரிச்சல், முதலியவற்றை நீக்கும் ஸ்நானத்திற்குரிய சுகந்த பொன்னாங்கண்ணித் தைலம் ½ புட்டி ரூ. 2—8—0

9. தலைபாரம், தலைவலி, ஒற்றைத் தலைவலிகளைப்போக்கும் "சிரரோக நிவாரணி" தைலம் ¼ புட்டி ரூ. 1—8—0

10. தலைவலி, தலைபாரம், மண்டையிடி முதலியவற்றை நீக்கி ஆச்சரியகரமான குணத்தைக் கொடுக்கக்கூடிய பிருங்க ராஜத் தைலம் ½ புட்டி ரூ. 2—8—0

11. "கர்ணாமிர்தம்" இது காதுகளில் ஏற்படக்கூடிய எல்லாவிதமான ரோகங்களுக்கும் கைகண்ட கிருதம், உபயோகித்தபின் உண்மை விளங்கும் 7 தடவைக்கு உபயோகிக்க வேண்டிய மருந்து விலை ரூ. 1—0—0

12. வில்வாதி லேகியம் நாற்பது வகைப்பித்தம், உப்பிசம், கைகாலெறிவு, காந்தல், அரோசகம், அன்னத்வேஷம், வேர்வை, வாந்தி, விக்கல், குன்மம், ஏங்கல், அஸ்திசுரம், மயக்கம், கிறுகிறுப்பு, கிராணி, கழிச்சல், காமாலை, பாண்டு முதலிய வியாதிகளை நிவர்த்தி செய்விக்கும் 1 மண்டலம் மருந்து விலை ரூ. 5—0—0

N. B. ஒவ்வொரு மருந்துடனும் உபயோகிக்கும் முறை முதலான விவரங்கள் தெரிவிக்கப்படும். வேண்டிய மருந்துகளை V. P. மூலமாய் அல்லது நேரிலும் பெற்றுக்கொள்ளலாம். V. P. மூலமாய் ஆர்டர் செய்யும்போது மருந்தின் கிரயத்தில் பாதித் தொகையை அட்வான்ஸாக அனுப்பவேண்டியது. வியாதி குணங்களை யறிந்து தெரியப்படுத்தினால் அதற்கு வேண்டிய மருந்துகளை யனுப்பப்படும்.

Apply to *The Manager,*

1. **Sri Krishnanandha Medical Hall,**
Veerakeralam,
Lawley Road-Post, Coimbatore.

2. **M. R. Varadharajaiyangar,**
Native Doctor,
Mallaigoundenpalayam, Palladam Post.